**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீவிசுவாவசு வருடம், மாசித்திங்கள் 15 ம் நாள்

**இ.ம.எண். 7/2026**

**in**

**அ.வ.எண். 162/2016**

1. பாலுச்சாமி (இறந்துவிட்டார்)
2. ருக்குமணி
3. யுவராஜ்
4. தாமோதிரன் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. N.சுப்பராய கவுண்டர் (இறந்துவிட்டார்)
2. S.தங்கராஜ் (இறந்துவிட்டார்)
3. புஷ்பராணி
4. T.ஜெயக்குமார் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 17.02.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.S.அங்குராஜ், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

## உத்தரவு

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாவா சொத்தின் அகலத்தை பொறுத்து மனுவில் கண்டுள்ளவாறு திருத்தம் செய்ய அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

i) அசல் வழக்கானது இம்மனுவின் மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2 ம் மனுதாரரின் கணவரான 1 ம் மனுதாரர் மேற்படி வழக்கை தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வந்தபோது கடந்த 17.04.2018 ம் தேதி 2 ம் மனுதாரரையும் 3, 4 மனுதாரர்களையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். பின்னிட்டு மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு அசல் வழக்கில் 2 முதல் 4 வாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். 1 ம் மனுதாரர் படிப்பறிவில்லாதவர்.

ii) 1 ம் மனுதாரர் தாவா சொத்து குறித்த ஆவணங்களை பார்க்காமலும் மனுதாரர்களது வழக்கறிஞரிடம் தவறுதலாக தாவா சொத்து 13 அடி அகலத்தில் இருப்பதாக தெரிவித்துவிட்டார். 1 ம் மனுதாரர் இறப்பிற்கு பின்னிட்டு மனுதாரர்கள் நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா சொத்தை வருவாய் துறை ஆவணங்கள் அடிப்படையில் அளவீடு செய்தபோது தாவா சொத்தானது வட்டமலை கிராமம், ரீ.ச.892/5 ல் அமைந்திருப்பதும் மேற்படி தாவா சொத்து மேற்கோட்டில் 24-1/2 அடி அகலத்திலும், கிழக்கோட்டில் 28-3/4 அடி அகலத்திலும் அமைந்துள்ளது.

iii) மேற்படி 1ம் மனுதாரர் அசல் வழக்கு தாக்கல் செய்தபோது வருவாய் துறை ஆவணங்களை சரிபார்க்காமலும் கண்மதிப்பாக 13 அடி என தவறுதலாக கூறிவிட்டார். தாவா சொத்து தடமானது வருவாய்துறை ஆவணத்தில் ரீ.ச.892/5 ல் அமைந்துள்ளது. மேற்படி ரீ.ச.892/5 ற்கு தென்புறத்தில் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது. மேற்படி எதிர்மனுதாரர்கள் தடத்தை மனுதாரர்கள் நடப்பதற்கு இடையூறு செய்ய முற்பட்டதாலேயே 1ம் மனுதாரர் மேற்படி அசல் வழக்கை தாக்கல் செய்தார். தாவாசொத்து ரீ.ச.892/5 ல் அமைந்திருக்கும் நிலையில் அந்த விஸ்தீரணத்தை பொறுத்து எதிர்மனுதாரகள் ஆட்சேபிக்க இயலாது.

iv) மேற்படி ரீ.ச.892/5 ல் விஸ்தீரணமானது மேற்கோட்டில் 24–1/2 அடி அகலத்திலும், கிழக்கோட்டில் 28–3/4 அடி அகலத்திலும் அமைந்துள்ளது. மேற்படி விபரத்தை 1ம் மனுதாரர் படிப்பறிவின்மையின் காரணமாக தவறுதலாக வழக்கறிஞரிடம் 13 அடி அகலத்தில் அமைந்திருப்பதாக தெரிவித்துவிட்டார். மேற்படி தாவா சொத்தின் அகலத்தை பொறுத்து மனுவில் கண்டுள்ளவாறு திருத்தம் செய்யாவிடில் மனுதாரர்களுக்கு பொருளால் ஈடுசெய்ய முடியாத பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும். எனவே தாவாசொத்தின் அகலத்தை பொறுத்து மனுவில் கண்டுள்ளவாறு திருத்தம் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

<u>2. 3, 4 எதிர்மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>:–

i) மனுதாரர்கள் மனு பொய், மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர்கள் இந்த எதிருரையில்

வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபணம் செய்ய வேண்டியது.

ii) மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு 05.01.2026 ல் விசாரணைக்கு போடப்பட்டு இருந்த சமயம் வாதிகளால் வாய்தா கோரப்பட்டு 12.01.2026 க்கு வாய்தா உள்ளது. மீண்டும் 22.01.2026 ல் இம்மனுவை தாக்கல் செய்து வழக்கினை இழுத்தடிக்கும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. 2016 ம் ஆண்டு தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் தாவா தாக்கல் செய்து தாவா தடத்தை 13 அடி அகலம் என குறிப்பிட்டு கோரிக்கை வைத்து தாக்கல் செய்துள்ள இம்மனுவில் தற்போது ஆவணங்களுக்கு புறம்பாகவும் பூஸ்துதி அமைப்புகளுக்கு எதிராகவும் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல.

iii) பதிவு செய்யப்பட்டுள்ள பத்திரத்தின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ள அகலத்தை தவிர தற்போது மேற்கோட்டு 24–1/2 அடி அகலத்திலும் கிழக்கு கோட்டில் 28–3/4 அகலத்திலும் அமைந்துள்ளதாக திருத்தம் கோருவது உண்மைக்கும் அனுபவத்திற்கும் புறம்பானது. வருவாய்த்துறை ஆவணங்கள் தாவா சொத்தின் பாத்தியத்தையோ அனுபவத்தையோ விளம்பக்கூடியதல்ல. இந்த வழக்கானது நிலைக்கால உறுத்துக்கட்டளைக்கு தாக்கல் செய்யப்பட்டு தற்போது வழக்குரை திருத்தம் கோருவது ஏற்புடையதல்ல. ஏற்கனவே இ.ம.எண்.6/2025 ல் திருத்தம் கோரிவிட்டு தற்போது மீண்டும் வழக்குரை திருத்தம் கோருவது நீதிக்கு புறம்பானது. வழக்கு விசாரணைக்கு வந்த பிறகு வழக்குரை திருத்தம் கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இரு தரப்பு வாதங்கள் மற்றும் வழக்காவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது, இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**5. தீர்வு:-**

மனுதாரர்/வாதி தரப்பில் 1ம் மனுதாரர் படிப்பறிவில்லாதவர் என்றும் 1ம் மனுதாரர் தாவா சொத்து குறித்த ஆவணங்களை பார்க்காமலும் மனுதாரர்களது வழக்கறிஞரிடம் தவறுதலாக தாவா சொத்து 13 அடி அகலத்தில் இருப்பதாக தெரிவித்துவிட்டார் என்றும் 1ம் மனுதாரர் இறப்பிற்கு பின்னிட்டு மனுதாரர்கள் நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா சொத்தை வருவாய் துறை ஆவணங்கள் அடிப்படையில் அளவீடு செய்தபோது ரீ.ச.892/5 ல் தாவா சொத்து மேற்கோட்டில் 24-1/2 அடி அகலத்திலும், கிழக்கோட்டில் 28-3/4 அடி அகலத்திலும் அமைந்துள்ளது என்றும் எனவே தாவா சொத்தின் அகலத்தை பொறுத்து மனுவில் கண்டுள்ளவாறு திருத்தம் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டு 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் 2016ம் ஆண்டு தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் தாவா தாக்கல் செய்து தாவா தடத்தை 13 அடி அகலம் என குறிப்பிட்டு கோரிக்கை வைத்து தாக்கல் செய்துள்ள இம்மனுவில் ஆவணங்களுக்கு புறம்பாகவும் பூஸ்துதி அமைப்புகளுக்கு எதிராகவும் தாக்கல் செய்துள்ள இம்மனு

நிலைக்கத்தக்கதல்ல என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது இம்மனுவின் 1ம் மனுதாரர்/1ம் வாதியால் 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 18.11.2016 அன்று 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தினம் அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, 1ம் வாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளான 2 முதல் 4 வாதிகளை அசல் வழக்கில் கட்சி சேர்க்ககோரி இ.ம.எண்.1098/2019 மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு கடந்த 21.10.2019 அன்று அனுமதிக்கப்பட்டு 2 முதல் 4 வாதிகள் அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டு, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தை சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்யக்கோரி இ.ம.எண்.578/2017 மனு தாக்கல் செய்யப்பட்டு கடந்த 10.09.2024 அன்று நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு கடந்த 13.10.2025 அன்று நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கானது வாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 20.01.2026 அன்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாவா சொத்தின் அகலத்தை பொறுத்து மனுவில் கண்டுள்ளவாறு திருத்தம் செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த திருத்தல் மனுவில் வழக்குரை 5 வது பக்கத்தில் சொத்து விபரத்தில் 8 வது வரியில் இதன் மத்தியில் 13 அடி அகல கிழமேல் வண்டித்தடம் என்பதை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக இதன் மத்தியில் மேற்கோட்டில் 24–1/2 அடி அகலத்திலும், கிழக்கோட்டில் 28–3/4 அடி அகல கிழமேல் வண்டித்தடம் சகிதம் என்றும் மேற்படி வண்டித்தடம் ரீ.ச.896/5 ல் அமைந்துள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாவா சொத்தை வருவாய் துறை ஆவணங்கள் அடிப்படையில் அளவீடு செய்தபோது தாவா சொத்தானது வட்டமலை கிராமம், ரீ.ச.892/5 ல் அமைந்திருப்பதும் மேற்படி தாவா சொத்து மேற்கோட்டில் 24–1/2 அடி அகலத்திலும், கிழக்கோட்டில் 28–3/4 அடி அகலத்திலும் அமைந்துள்ளது என்றும் ரீ.ச.892/5 ல் அமைந்துள்ளது என்றும் எனவே தாவாசொத்தின் அகலத்தை பொறுத்து மனுவில் கண்டுள்ளவாறு திருத்தம் செய்ய வேண்டும் என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டு மேற்படி சங்கதிகள் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது.

9. வழக்குரை சொத்து விபரத்தை பரிசீலிக்கும்போது அதில் தாவா தடத்தின் அகலம் 13 அடி அகலம் என்று சொல்லப்பட்டுள்ளது. தற்போது இந்த திருத்தல் மனுவில் தாவா தடத்தின் அகலம் மேற்கோட்டில் 24–1/2 அடி அகலத்திலும் கிழக்கோட்டில் 28–3/4 அடி அகலத்திலும் என திருத்தம் செய்ய வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும்

வரைபடத்தை பரிசீலிக்கும்போது ரீ.ச.எண்.892/5 ல் தற்போது தடப்பகுதி 332 ச.மீ என்றும் அதில் உள்ள மண் திட்டு மற்றும் புதர் செடி கொடிகள் உள்ள பகுதி 250 ச.மீ என்றும் மண் திட்டு மற்றும் வாய்க்கால் பகுதி 72 ச.மீ என்றும் சொல்லப்பட்டுள்ளது. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது அசல் வழக்கில் இன்னும் சாட்சிய விசாரணைகள் துவங்கப்படாத நிலையில் உள்ளது.

10. அசல் வழக்கானது மனுதாரரால் தாவா தடமான 13 அடி அகல தாவா தடத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது மேற்படி தடத்தின் அகலம் மேற்கோட்டில் 24–1/2 அடி அகலத்திலும் கிழக்கோட்டில் 28–3/4 அடி அகலத்திலும் என இம்மனுவில் கோரியுள்ள திருத்தல் விபரங்கள் அசல் வழக்கின் அடிப்படைத் தன்மையை மாற்றும் வகையிலோ புதிய வழக்கை தோற்றுவிக்கும் வகையிலோ இல்லை. மேற்படி திருத்தத்தை செய்யும் பட்சத்தில் தான் அசல் வழக்கை மேற்கொண்டு நடத்த முடியும் என்று மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது. மேலும் இந்த திருத்தல் மனுவில் வாதிகள் தரப்பில் சொல்லியுள்ள சங்கதிகளை பொறுத்து நிரூபணம் செய்ய வேண்டிய பொறுப்பு வாதிகள் வசமே உள்ளது.

11. எனவே 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள பத்திரத்தின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ள அகலத்தை தவிர தற்போது மேற்கோட்டு 24–1/2 அடி அகலத்திலும் கிழக்கு கோட்டில் 28–3/4 அகலத்திலும் அமைந்துள்ளதாக திருத்தம் கோருவது உண்மைக்கும் அனுபவத்திற்கும் புறம்பானது என்றும் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் சொல்லப்பட்டிருந்தாலும் இம்மனுவில் கண்டுள்ள திருத்தங்கள் அசல் வழக்கின்

அடிப்படை தன்மையை மாற்றும் வகையில் இல்லை என்பதாலும் மற்றும் புதிய வழக்கு மூலத்தை தோற்றுவிக்கும் வகையில் இல்லை என்பதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்பட போவதில்லை என்பதாலும் தரப்பினர்களுக்கிடையேயுள்ள பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் தங்களது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரர்களுக்கு போதிய வாய்ப்பை வழங்க வேண்டியது நீதியின்பால் அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், அசல் வழக்கின் சாட்சிய விசாரணை இன்னும் துவக்கப்படாததாலும் திருத்தல் மனுவில் மனுதாரர்கள் தரப்பில் சொல்லியுள்ள சங்கதிகளை நிரூபணம் செய்யும் பொறுப்பு மனுதாரர்கள் வசமே உள்ளது என்பதாலும், மேலே கண்ட விவாதங்களின்படியும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதினாலும் அசல் வழக்கானது கடந்த 2016 ம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வரும் நிலையில் அசல் வழக்குரையில் திருத்தம் செய்யக்கோரி மிகவும் காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் மற்றும் கால விரயத்தை கருத்திற்கொண்டு இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர்கள்/வாதிகள் கூட்டாகவும் தனித்தனியாகவும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகளுக்கு ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்)

செலவு தொகையாக வரும் 04.03.2026 ம் தேதிக்குள் நேரடியாக வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

2. இரு தரப்பினரும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க ஒத்துழைக்கவேண்டும். மீண்டும் அழைக்க 04.03.2026.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.02.27 19:42:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.02.27 19:42:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.